DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 347/2025**

**eposition of LW3 examined as PW2** Dt. 10.03.2026

| | |
|---|---|
| Name | ரவி |
| Father's/Husband's Name | ராமலிங்கம் |
| Village | காவேரி கரை தெரு |
| Taluk | குத்தாலம் |
| Age | 36/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 10.03.2026

(Accused present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியல் வசித்து கோவில்களுக்கான சொதை வேலை செய்து வருகிறேன். கடந்த கடந்த 01.07.2025 அன்று மயிலாடுதுறையில் இருந்து சித்தாம்பூர் செல்லும் A29 என்ற பேருந்தில் பின்புறம் அமர்ந்து பிரயாணம் செய்தேன். கோமலில் உள்ள ருக்மணி அம்மாள் பெருமாள் கோயிலுக்கு முதல் நாள் செய்த சொதைப்பணிக்கு தண்ணீர் விட அன்றைய தினம் சென்றேன். மாலை 5.15 மணிக்கு பேருந்து சத்யாநகர் அருகே சென்றபோது ஆஜர் எதிரிக்கும், அ.சா.1 ஓட்டுனருக்கும் இடையே ஆஜர் எதிரியின் இருசக்கர வாகனத்தை எடுக்க சொல்லி தகராறு நடந்தது. நான் இறங்கி சென்று பார்த்தேன். அப்போது ஆஜர் எதிரி ஓட்டுனர் அருகே உள்ள கதவைத் திறந்து ஓட்டுநரை நெஞ்சில் கையால் குத்தினார். அதன் பிறகு ஓட்டுநரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நான் வேலைக்கு சென்று விட்டேன். நான் வெளியூர் என்பதால் என்னால் எதுவும் பேசமுடியவில்லை. உடனே நான் ஓட்டுனரின் மனைவிக்கு அலைபேசியில் தகவல் தெரிவித்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் குத்தாலம் காவேரி கரை தெருவை சேர்ந்தவன். அ.சா.1 எனது ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் சாட்சியமளித்த விவரங்களைதான் போலீசாரிடம் தெரிவித்தேன் என்றால் போலீசார் என்னை போன் மூலமாக விசாரித்ததாக தெரிவித்தேன். எனது முதல் விசாரணையில் அ.சா.1ன் மனைவிக்கு தகவல் தெரிவித்ததாக கூறியுள்ளேன். இந்த விவரங்களை போலீசார் விசாரணையில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. அ.சா.1 ஒரே தெருவில் வசித்து

R.Ravi

வருகிறீர்கள் அவர் எனது உறவினரா என்றால் இல்லை பழக்கம். வேண்டப்பட்டவர் என்றால் சரிதான். அ.சா.1 எனக்கு வேண்டப்பட்டவர் என்பதாலும், போலீசார் கேட்டுகொண்டதற்கு இணங்க அவருக்கு சாதகமாக நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில், சம்பவ இடத்தில் நான் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல

**மறுவிசாரணை இல்லை.**

R. Ari